DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:**S.C.75**/2025
Prosecution Witness P.W.21

| | |
|---|---|
| Name: **திரு.**கைலாசம் கனகராஜன் | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

A2, 3 , 4 எதிரிகள் ஆஜர், A1 காணொளி காட்சி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.

**நாள்: 27.07.2026**

(சாட்சி காணொளி காட்சி மூலம் ஆஜர்)

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ரிலையன்ஸ் ஜியோ இன்போகார்ம் நிறுவனத்தில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பகுதிக்கான நோடல் அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். என்னுடன் பணியாற்றி வந்த திரு.கைலாசம் என்பவர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு 06.05.2025ம் தேதியன்று எங்கள் நிறுவனத்தை விட்டு சென்றுவிட்டார். இந்த வழக்கில் அவர் அளித்த ஆவணங்களின் அடிப்படையில் தற்போது நான் சாட்சியம் அளிக்கிறேன். அவரின் கையெழுத்து எனக்கு நன்றாக தெரியும்.

2. கடந்த 04.01.2025ம் தேதியன்று தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் இ-மெயிலிருந்து எங்கள் நிறுவன நோடல் இ-மெயில் ஐடிக்கு ஒரு இ-மெயில் வந்தது. அதில் கண்டமனூர் காவல் நிலைய குற்ற எண்.178/2024 சம்பந்தமாக ------, ------ மற்றும் ------- ஆகிய மூன்று அலைபேசி எண்களுக்கு 19.10.2024ம் தேதி முதல் 21.10.2024ம் தேதி வரையிலான அழைப்பு விபரங்கள், வாடிக்கையாளரின் விண்ணப்ப படிவங்கள்

மற்றும் அதற்குரிய 63(4)(c) சான்றிதழ் இணைத்து வழங்குமாறு கண்டமனூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் திருமதி.கீதா அவர்களின் வேண்டுகோள் கடிதம் இணைத்திருந்தது.

3. இந்த கோரிக்கையின் பேரில் மேலே குறிப்பிடப்பட்ட மூன்று கைபேசி அழைப்புகளின் விபரங்கள் குறுந்தகடு–ல் பதிவிறக்கம் செய்து, அவற்றுடன் வாடிக்கையாளரின் விண்ணப்ப படிவங்களை நகல் எடுத்து அதற்குரிய 63(4)(c) சான்றிதழ் மற்றும் 17.01.2025ம் தேதியிடப்பட்ட பதில் கடிதமும் இணைத்து கண்டமனூர் காவல் ஆய்வாளருக்கு கொரியர் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டது. 19.10.2024ம் தேதி முதல் 21.10.2024ம் தேதி வரையிலான அலைபேசி எண்கள் ------, ------ மற்றும் ------ என்ற எண்களுக்கான தொலைபேசி அழைப்பு விபரங்கள் அடங்கிய ஆவணங்கள் அ.த.சா.ஆ.27 வரிசை (13 எண்ணம்), மேற்படி விபரம் அடங்கிய குறுந்தகடு அ.த.சா.ஆ.28 இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 63 BSA சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் சமர்ப்பித்துள்ள தரவுகளில் 20.10.2024ம் தேதி குறித்து சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக ஒரு சில சமயங்களில் செல்போன் அல்லது சிம் கார்டு யார் பெயரில் உள்ளதோ அவர்களை தவிர வேறொரு நபர்கள் அதனை பயன்படுத்த வாய்ப்புண்டு என்று சொன்னால் சரிதான். நான் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது போல 20.10.2024ம் தேதியன்று கூறிய செல்போன்களை யார் பயன்படுத்தினார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாதென்றால் சரிதான்.

2. அந்த குறிப்பிட்ட காலகட்டத்தில் அந்த நபர்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்ற விபரத்தையும் சொல்லமுடியாதென்றால் சரிதான். நான் கைலாசம் அவர்கள் ரிலையன்ஸ் ஜியோ நிறுவனத்தில் பணியாற்றிய காலத்தில் நானும் அதே அலுவலகத்தில் பணியாற்றினேன் என்பது குறித்து நான் ஏதாவது ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

கைலாசம் என்பவர் ஜியோ நிறுவனத்தில் பணிபுரிந்த காலத்தில் நான் அவருடன் பணியாற்றவில்லை என்பதால் தான் நான் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. நான், கைலாசம் இருவரும் ஏக காலத்தில் ஒரே நிறுவனத்தில் பணிபுரிந்தது குறித்து எவ்வித ஆவணமும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்காததால் கைலாசத்தின் சார்பாக நான் சாட்சியம் அளிப்பதற்கு சட்டரீதியான தகுதி கிடையாதென்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

A. SARAVANAKUMAR

Digitally signed by A. SARAVANAKUMAR
Date: 2026.07.27 17:04:11 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.